## அபிவிருத்தி லொத்தர் சபை - 2023

---------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு

நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் படி இருப்புக்கள், கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி பௌதீக ரீதியாக களஞ்சியத்தில் காணப்படாத கிரயம் ரூபா 443,609 தொகைக்கான நிகர தேறிய | லொத்தர் டிக்கட் புத்தகங்களுக்காக செயற்பாட்டு ரீதியாக தேறிய நிகரப் பெறுமதி ஒன்று காணப்படாமையால் லொத்தர் டிக்கட்களின் கொள்வனவு பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி காணப்படாத 2883 ஷனிக்க லொத்தர் பத்திரங்களுக்கான இருப்பு ஒன்று கொள்வனவு கிரயத்திற்கு இறுதி இருப்பில் உட்படுத்தப்பட்டிருந்தமையால் தடுத்து வைக்கப்பட்ட உழைப்பு ஒதுக்கம் மற்றும் ஷனிக்க லொத்தர் பத்திர இறுதி இருப்பு அந்த தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் படி ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்களில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய எதிர்கால பொருளாதார இலாபம் நிறுவனத்திற்கு உள்பாய்ச்சல் ஏற்படும் போது மற்றும் அதன் கிரயம் நம்பகரமான அளவீடு செய்ய முடியும் எனின் மாத்திரம் அதனை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காண வேண்டியிருந்த போதிலும் பொருளாதார இலாபம் நிறுவனத்தினுள் உட்பாய்ச்சல் ஏற்படுதல் என்ற நிபந்தனையை நிறைவேற்ற முடியாத பௌதீக ரீதியாக சபையிடம் காணப்படாத பெறுமதி ரூபா 8,095,000 தொகைக்கான கப் வண்டி ஒன்று மற்றும் தற்போது பாவணையிலிருந்து அகற்றப்பட்டுள்ள ரூபா 7,641,159 தொகை பெறுமதியான 07 சீட்டிழுப்பு இயந்திரங்கள் மீளாய்வாண்டின் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்படிருந்தது. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 8,095,000 தொகைக்கான டபள் கப் வண்டி சபைக்கு சொந்தமாக பௌதீக ரீதியாக காணப்படவில்லை என என்ற கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். இந்த கப் வண்டி தொடர்பாக தற்போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு (வழக்கு இலக்கம் - DMR/4781/2021) உள்ளதுடன் சபையின் பேரில் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் அதனை நிலையான சொத்தொன்றென கணக்கீடு செய்யப்பட்டது.<br><br>இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 7,641,119 தொகை பெறுமதியில் 04 சீட்டிழுப்பு இயந்திரங்கள், 1 வாயு அழுத்தி இயந்திரம் மற்றும் சீட்டிழுப்புக்காக பயன்படுத்தப்படும் பந்துகள் உட்படுகின்றன. இந்த விடயங்கள் சீட்டிழுப்பு கருமங்களுக்காக சபையினால் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட விடயங்களாக காணப்படுவதுடன் இவை சபையின் சொத்துக்கள் என பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த விடயம் சீட்டிழுப்பு கருமங்களுக்காக பயன்படுத்தப்படும் விஷேட இயந்திரமாகக் காணப்படுவதினால் இந்த இயந்திரத்தை அகற்றும் போது சிக்கல் ஒன்று காணப்படுகின்றது. இது | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

காணப்படும் விஷேடத்துவம் மற்றும் சிதைவடைந்த நிலைமையின் மீது இவற்றை வெளித் தரப்பினருக்கு அகற்றுதல் கடினமாக உள்ளது. தற்போது இந்த இயந்திரங்களை அகற்றாமையினால் இந்த இயந்திரக் கணக்கில் காட்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அபிவிருத்தி லொத்தர் சபையினால் மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதி முதல் ஜுலை 05 திகதி வரையான காலப் பகுதியுள் சனிதா வாசனா, லக்ன வாசனா, ஜயோதா, கப்ருக, அதகோடிபதி மற்றும் வாலம்புரி ஆகிய 06 லொத்தர் பத்திரங்களின் விஷேட இரண்டாவது சீட்டிழுப்புக்காக மற்றும் ஜுலை 6 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் சனிதா வாசனா, லக்ன வாசனா, ஜயோதா, சுபர் போல், கப்றுக, அதகோடிபதி, சுபிரி தன சம்பத மற்றும் வாலம்புரி ஆகிய 8 லொத்தர் பத்திரங்களின் ‘‘தெவன வரம’’ மற்றும் ‘‘ஸெகன்ட் சான்ஸ்’’ சீட்டிழுப்புக்காக பரிசுத் தொகை என செலுத்தியிருந்த ரூபா 761,885,800 இற்கான தொகை மீளாய்வாண்டிற்கான பரிசுச் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்படாமல் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு அந்தத் தொகையினால் பரிசுச் செலவு குறைவாகவும் மற்றும் இலாபம் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஜுலை மாதம் 06 திகதி முதல் லொத்தர் பத்திரங்களின் விற்பனை விலை அதிகரிப்பதலுக்காக நேரொப்பாக லொத்தர் பத்திரங்கள் தொடர்பாக நுகர்வோரின் கேள்வி ஏற்படக் கூடிய பொருண்மையான பின்னடைதலை தடுத்துக் கொள்ளும் குறிக்கோளுடன் தெவன வரம மற்றும் ஸெகன்ட் சான்ஸ் என மேலதிக சீட்டிழுப்பு தவணைகள் நுகர்வோருக்கு அறிமுகப்படுத்தும் மூலோபாய செய்முறை ஒன்று அபிவிருத்தி லொத்தர் சபையினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் கடைபிடிக்கப்பட்டது.<br><br>அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரகாரம் பின்வருமாறு பரிசு ஒதுக்கக் கணக்கு பயன்படுத்தப்பட்டு மேலதிக பரிசுகள் வழங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பரிசு ஒதுக்கக் கணக்கில் சேகரிக்கப்பட்டிருந்த தொகை இதற்கு முந்திய சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு இருந்தமையால் மீண்டும் ஒரு முறை செலவு ஒன்று என காட்டப்படத்தேவை இல்லை என அறிவிக்கின்றேன். | ‘‘தெவன வரம’’ மற்றும் ‘‘ஸெகன்ட் சான்ஸ்’’ ஆகிய சீட்டிழுப்பு சந்தர்ப்பங்களுக்காக ஒதுக்கக் கணக்கில் ஏற்பாடுகளை பயன்படுத்தாமல் ஆண்டிற்கான பரிசுச் செலவுகள் கணக்குகள் ஊடாக குறிப்பிட்ட செலவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் இருப்புக் கணித்தல் செய்முறையின் படி தொடர்ந்து வரும் ஆண்டின் சீட்டிழுப்புக்காக அச்சிடப்பட்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள லொத்தர் பத்திரங்களின் பெறுமதி இறுதி இருப்பு கணிப்பின் போது இறுதி இருப்பு என இனங்காணப்பட்ட போதிலும் 2024 ஜனவரி 01 திகதி முதல் ஜனவரி 27 திகதி வரையான காலப் பகுதியில் சீட்டிழுப்புக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 4,605,000 லொத்தர் பத்திரங்களின் பெறுமதி ஆகிய ரூபா 5,787,310 தொகை இறுதி இருப்பில் உட்படுத்தப்பட்டிருக்காமையால் இறுதி இருப்பு மற்றும் வர்த்தக கடன்கொடுத்தோர் அந்த தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 460,500 டிக்கட் புத்தகங்கள் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சியத்திற்கு கிடைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த டிக்கட் புத்தக இருப்பு உரிய விவரக் குறிப்பிற்கு அமைவாக உள்ளதா என சான்றுபடுத்தப்பட்டு GRN வழங்கப்பட்டிருக்காமையால் அந்த டிக்கட் புத்தக இருப்பு 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த டிக்கட் பத்திர இருப்பு 2023 திசெம்பர் 31 திகதி அளவில் களஞ்சியத்திற்கு கிடைந்தமையால் கையில் இருப்பு என கணிக்கப்பட வேண்டும். |
| (இ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் ஓய்வுபெறும் போது அல்லது ஊழியர்கள் விலகிச் செல்லும் போது செலுத்த வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுக்காக இரண்டு அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த 06 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 6,619,629 இற்கான வட்டி வருமானம் தேறிய ஊழியர் நலன் பொறுப்பு கணிக்கும் போது கவனத்தில் எடுக்காமல் நடைமுறை சொத்துக்களின் கீழ் காணப்படும் நிலையான வைப்புக்களின் பெறுமதியுடன் கூட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் நிலையான வைப்பு மீதி மற்றும் ஊழியர் நலன் பொறுப்பு மீதி அந்த தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 6,619,629 இற்கான வட்டி வருமானம் பெற வேண்டிய வட்டி வருமானம் ஒன்றாக காணப்படுவதுடன் சபையினால் வட்டி வருமானத்தை மீண்டும் நிலையான வைப்புக்களுடன் கூட்டி முதலீடு செய்யப்படாமையால் தேறிய ஊழியர் நலன் பொறுப்பு கணிக்கும் போது கவனத்தில் எடுக்காமல் நடைமுறை சொத்துக்களின் கீழ் காணப்படும் நிலையான வைப்புக்களின் பெறுமதியுடன் கூட்டப்பட்டுள்ளது. | இந்த 06 நிலையான வைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டது விலகிச் செல்லும் ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்வதற்காக இருந்ததுடன் பெற வேண்டிய வட்டி வருமானம் தேறிய நலன் பொறுப்புக்களை கணிக்கும் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ச.தொ.ச. நிறுவனத்தில் இருந்து 2009 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 592,500 பெறுமதியான 123 பரிசு வவுசர் பத்திரங்கள் நிதி நிலைமை கூற்றில் பரிசுப் பண்ட இறுதி இருப்பு என உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த வவுசர் பத்திரங்கள் லொத்தர் சபைக்கு கிடைத்து மீளாய்ாவாண்டு இறுதி அளவில் 14 வருடங்களை விட மிகையான காலம் | ச.தொ.ச. நிறுவனத்தினால் இந்த வவுசர் பத்திரங்கள் மீண்டும் உயிர்ப்பித்துக் கொடுப்பதற்கு முடியாது என கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தமையால் அந்த வவுசர் பத்திரங்களின் மீதியை தொடர்ந்தும் கணக்குகளில் பேணிச் செல்லல் | இந்த பரிசு வவுசர் பத்திரங்களுக்கு பணம் பெற்றுக் கொள்ளல் அல்லது அவற்றை மீண்டும் உயிர்பித்தல் முடியாமல் காணப்படுவதனால் இந்த மீதி |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்தமையால் மற்றும் அதற்கான பணம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை ஒன்று காணப்பட்ட போதிலும் அதற்கு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்கள் என பதியப்பட்டிருந்தது. | பயனற்ற விடயம் என கண்டறியப்பட்டமையால் கணக்குகளில் இருந்து அகற்றுவது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஆலோசனையின் படி 2024 மே மாதம் 20 திகதி நடைபெற்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்த தொகையினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. | தொடர்பாக பொருத்தமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் சாப்பாட்டு அறை, களஞ்சிய அறை மற்றும் எல்லை சுவர் திருத்த வேலைக்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,728,884 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டு இறுதி அளவில் 06 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் தேவையான கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளாமல் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலை என காட்டப்பட்டிருந்தது. | சொத்தொன்று என இனங்காண்பதற்காக குறிப்பிட்ட சொத்து நலன் பெறும் மட்டத்திற்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதன் காரணமாக 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை மூலதனப்படுத்தி பெறுமானத்தேய்வு கணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சாப்பாட்டறை மற்றும் களஞ்சிய அறை தற்போது பயன்படுத்தப்படுவதனால் தேவையான கணக்கீட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| | விடயம் | நிதிக் கூற்றின் படி பெறுமதி ரூபா. | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி ரூபா. | வித்தியாசம் ரூபா. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகள் | | | | ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் அசோசியேடட் நியுஸ்பேபர் கம்பனியினால் கணக்காய்விற்கு நேரடியாக உறுதிப்படுத்திய மீதி தொடர்பாக விவரங்களை வழங்கும் படி வேண்டுவதுடன் குறிப்பிட்ட இணக்கங்கள் | குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி அந்த மீதிகளை இணக்கஞ் செய்ய வேண்டும். |
| | - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 11,884,975 | 22,606,401 | 10,721,426 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | - வரையறுக்கப்பட்ட அசோசியேடட் நியுஸ்பேபர் கம்பனி | 4,735,627 | 2,754,832 | 1,980,795 | மேற்கொள்ளப்பட்டு வித்தியாசத்தை விளக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் மீதிகள் | | | | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த வித்தியாசம் 2024 ஆண்டில் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது. | அட்டவணைகளுடன் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் சொத்து மீதிகளை இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |
| | - அலுவலக உபகரணங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி மீதி | 43,416,368 | 43,353,012 | 63,356 | | |
| | - தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மீதி | 14,802,820 | 14,881,156 | 78,336 | | |
| | - கணினி துணைக் கருவிகள் | 57,425,324 | 57,175,052 | 250,272 | | |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வொக்ஷோல் வீதியில் 234 இலக்கம் கொண்ட கட்டிடம் 2006 ஒக்டோபர் மாதம் முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்தற்வதற்காக அணுகியிருந்த உடன்படிக்கை ஒரு தலைப் பட்சமாக மீறப்பட்டிருந்தமையால் வைப்புத் தொகை என செலுத்தப்பட்டிருந்த ரூபா 723,780 தொகை மற்றும் இந்த ஆண்டுகளுக்காக செலுத்திய வாடகைத் தொகை பகுதி ஒன்றான ரூபா 4,976,220 தொகை ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா 5,700,000 தொகையினை தற்போது 17 வருடங்களாக அறவீடு செய்வதற்காக சபைக்கு இயலாமல் உள்ளது. | வொக்ஷோல் வீதி 234 ஆம் இலக்க கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் தொடர்பாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 5,700,000 இற்கான தொகையினை அறவீடு செய்தல் தொடர்பாக நிதியமைச்சின் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு அறிக்கை ஒன்று பெறப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையை செயற்படுத்துவதற்கு தேவையான சட்ட அலுவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்குரிய அனைத்து தகவல்களும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து | பெற வேண்டிய தொகைகளை விரைவாக அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கிடைத்திருக்காமையால் 2023 ஜூலை 24 திகதியிடப்பட்டு உடைய மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு சட்டமா அதிபர் திணைக்கத்தில் இருந்து இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக வினவப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1990 ஆண்டு வோர்ட் இடத்தை சேர்ந்த நபர் ஒருவருடன் மேற்கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,520,000 இற்கான கட்டிட வாடகை வைப்புத் தொகையை அறவீடு செய்து தரும் படி 24 ஆண்டுகளுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 ஜனவரி 11 திகதி கிடைத்திருந்தது. குறிப்பிட்ட தொகையினை அறவீடு செய்யும் படி வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு 07 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அத் தொகையினை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாமல் இருந்தது. | இத் தொகையினை அறவீடு செய்வதற்காக சட்ட செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது என அரச பெண் சட்டத்தரணியினால் எழுத்துமூலம் 2023 ஒக்தோபர் 25 திகதி எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | இத் தொகையினை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வியாபார கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 414,095,595 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 1 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 207,860 இற்கான தொகையும், 3 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 2,800,000 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்தக் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் எதிர்காலத்தில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் 2023 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதியுள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>3 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 2,800,000 இற்கான மீதி, அபிவிருத்தி லொத்தர் சபையின் செயற்படு முறைமைக் கோவை தயாரிப்பது தொடர்பாக செலுத்த வேண்டிய தொகையாகும். இந்த விடயத்தின் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் | செலுத்த வேண்டிய தொகைகளின் சட்டரீதியான தன்மையை மீண்டும் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இதுவரை கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம் | | | |
| i. பிரிவு 17(5) | பரிசு பெறுவோர் உரிமை கோராத, 06 மாத காலவரையறையை மிகைத்துள்ள பரிசுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணம் முதலில் நிதியத்திற்கும், அதன் பின்னர் ஜனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மற்றும் 2020 ஆண்டுகளின் போது பரிசுகள் வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 779,750 தொகைக்கான மூன்று மோட்டார் சைக்கிள்களை விற்பனவு செய்து அந்த சட்டத்தின் பிரகாரம் ஈடுபடுத்துவதற்கு 2022 ஆண்டு மே 31 திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட அலுவல்கள் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளின் போது சுபர்போல் மற்றும் கோடிபதி சனிதா லொத்தர் பத்திரங்களில் சீட்டிழுப்பு பரிசுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்களை அப்புறப்படுத்தி அந்த தொகையினை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்கு 2022 மே 31 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தது.<br><br>அதன்படி அந்த 03 மோட்டார் சைக்கிள்களையும் முறைப் பிரகாரம் மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், பெறுமதி மதிப்பீடு செய்த பின்னர் தொடர்ந்து வரும் 02 மாதங்களில் முறையான அப்புறப்படுத்தல் செய்முறை ஒன்றிற்கு ஆளாக்கி அந்த நிதியை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii. பிரிவுகள் 19(1) மற்றும் 19(2) | விதிக்கப்பட்டுள்ளது என இந்த சட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ள அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் சபையினால் விதிகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கில்லை. | தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள விதிகள் அடங்கிய பதிவேடு ஒன்று பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதில் கணினி முறைமைக்கு உரிய விதிகள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிப் பிரிவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது டன் மேலும் சபையின் பிரிவுகள் இடையேயுள்ள அலுவல்கள் தொடர்பாக உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய திருத்தப்பட்ட வரைவு எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்படவுள்ளது. | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 திகதிய இலக்கம் 08/2019 கொண்ட அரச நிதி திணைக்கள சுற்றறிக்கை | 2020 ஜனவரி 31 திகதிக்கு முன்னர் அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள் [www.promise.lk](http://www.promise.lk) இணைய தளத்தின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ள இலத்திரனியல் அரச பெறுகை நடைமுறை (e-GP) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அபிவிருத்தி லொத்தர் சபை இந்த செய்முறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் அதன் படி பெறுகை அலுவல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | E-GP இற்காக சபை பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்கள் பங்கு பற்றியிருந்தார்கள். அதில் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகள் மற்றும் அந்த முறைமையின் ஆரம்பப் பயிற்சி மாதிரிகள் நிறைவேற்றல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| | i. பிரிவு 4.2.3 இற்கான 31 ஆவது பின்னிணைப்பு | ரூபா 1,328 மில்லியனிற்கான மதிப்பீட்டு பெறுமதியொன்றில் 2023 ஆண்டிற்காக 08 வகையான லொத்தர்களின அச்சு அலுவல்கள் மேற்கொள்ளல் மற்றும் வழங்கல்களுக்காக | பெறுகை மதிப்பாய்வு செய்முறையின் போது சந்தர்ப்ப ரீதியாக ஏற்படக்கூடிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது மதிப்பீட்டுக் காலத்தை | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் மீது செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அச்சிடுபவர்கள் தெரிவு செய்யும் பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு 10 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்காக 65 வார காலம் ஒன்று எடுத்திருந்தது. | விட மிகையான காலமொன்று எடுத்திருந்தது. பெறுகை 10 வாரங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட போதிலும், பெறுகையின் தன்மை மீது அதற்குரிய பெறுகை நேரசூசி தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் காணப்படுகின்றது. | |
| | ii. பிரிவு 2.9.2 இற்கான 32 ஆவது பின்னிணைப்பு | பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது முழுமையான கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக 10 வார காலப்பகுதியினுள் பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆண்டிற்காக லொத்தர் பத்திரம் அச்சீடு செய்யும் வழங்குனர்கள் தெரிவு செய்யும் போது பெறுகை கருமங்களுக்காக 65 வார காலம் செலவிடப்படும் போது குறிப்பிட்ட குழு அங்கத்தவர்களுக்கு மொத்தக் கொடுப்பனவாக ரூபா 345,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகைக்குழுக்காக கொடுப்பனவு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட நேரசூசிக்கு இணங்க பெறுகைக் கருமங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என கவனம் செலுத்தி அந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, அந்த அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நேரசூசிக்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு குறிப்பிட்ட அலுவல்கள் நிறைவேற்றுதல் மீது அந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் மீது செயற்பட வேண்டும். |
| | iii. பிரிவு 4.2.1 | மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | ஒவ்வொரு பெறுகை விடயங்களுக்குரிய கட்டங்கள் தொடர்ச்சியாக திருத்தப்படுவதனால் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் மீது செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஜனவரி 18 திகதிய 02/2022 (i) இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | (i) தொலைபேசிச் செலவு வரையறையை கவனத்தில் எடுக்காமல் அபிவிருத்தி லொத்தர் சபையின் உத்தியோகத்தர்கள் 11 பேருக்கு 2022 ஜனவரி | தொலைபேசிச் செலவு வரையறையை மிகைத்துப் பெற்றிருந்த ரூபா 141,599 தொகை தொலைபேசிக் கட்டணம் குறிப்பிட்ட பதவியணி அங்கத்தவர்களின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 2023 பெப்ரவரி வரையான காலப் பகுதியில் தொலைபேசிச் செலவுக் கூட்டுத்தொகை என ரூபா 141,599 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மாதாந்த சம்பளத்தில் இருந்து குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| | | (ii) தொலைபேசி செலவுக் கொடுப்பனவிற்கு உரிமையில்லாத 53 உத்தியோகத்தர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 1,200,064 தொகை தொலைபேசிச் செலவு கொடுப்பனவு என மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2023 பெப்ரவரி 23 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக 2024 மார்ச் 07 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்கத்திலிருந்து கிடைத்திருந்த கடிதத்தின் பிரகாரம் தொலைபேசிக் கொடுப்பனவு வழங்குவதற்காக மற்றும் தொலைபேசிகள் வழங்கும் செய்முறை தொடர்பாக புதிய செய்முறையொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு செயற்படுமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, இது தொடர்பாக முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட்டு 2024 மே 24 திகதி நடைபெற்ற 294 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன்படி, எதிர்காலத்தில் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திலிருந்து வழங்கியிருந்த அறிவுரைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு செய்முறையின் படி செயற்படுத்தப்படும். | அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (உ) | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2015 மே 25 திகதிய PED/1/2015 இலக்கம் | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையில்லாத ஐந்து உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ | 2023 ஜுலை 09 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அனுப்பியிருந்த கடிதத்தின் பிரகாரம் | சுற்றறிக்கையின் எற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 2.3 | வாகனங்கள் வழங்கியிருந்ததுடன், அதற்கான எரிபொருள் செலவு என மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 2,913,410 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்தது. | செயற்படுவதற்காக தேசிய லொத்தர் சபை கடைபிடிக்கும் செய்முறைக்கு ஒத்த செய்முறையொன்று அபிவிருத்தி லொத்தர் சபையும் கடைபிடித்து உதவிப் பொது முகாமையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு 2024 மே 20 திகதி நடைபெறும் 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளின் படி தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்காக அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அந்த புதிய செய்முறை 2024 ஜுன் மாதம் முதல் செயற்படுத்தப்படும். | |
| (ஊ) | 2016 மே 30 திகதிய 04/2016 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையில்லாத பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் சபையினால் பெற்றிருந்த மோட்டார் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த மோட்டார் வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு குத்தகை என ரூபா 2,028,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபையில் மோட்டார் வாகனங்களுக்கு காணப்படும் தட்டுப்பாடு காரணத்தினால் செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் 03 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த மோட்டார் வாகனங்களில் 02 மோட்டார் வாகனங்கள் பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், அடுத்த மோட்டார் வாகனம் உதவிப் பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டது. சபையின் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். |

தேக்கத்தில் காணப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று பிரதி பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டது. எதிர் காலத்தில் இந்த பெண் பொது முகாமையாளருக்கு செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,622,506,725 இற்கான வரியின் பின்னர் இலாபமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வரியின் பின்னரான இலாபம் ரூபா 3,210,687,041 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 411,819,684 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு லொத்தர் பத்திரங்கள் விற்பனை இலாபம் ரூபா 19,071,456,751 முதல் ரூபா 25,442,131,713 தொகை வரை 33 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது லொத்தர் பத்திர விற்பனை வருமானம் ரூபா 6,370,674,962 இனால் அதாவது 33 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்ாண்டின் ஜுலை மாதம் முதல் லொத்தர் பத்திரமொன்றின் விலை ரூபா 20 இலிருந்து ரூபா 40 வரை அதிகரிக்கப்படல் இதற்கு காரணமாக இருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் செயற்பாடுகள், இலாபகரத்தன்மை மற்றும் திரவத் தன்மையை காட்டும் விகிதாசாரம் தொடர்பான விளக்கமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | ஆண்டு | |
|---|---|---|
| | **2023** | **2022** |
| **<u>இலாபகரத்தன்மை விகிதாசாரம்</u>** | | |
| மொத்த இலாப விகிதாசாரம் (சதவீதம்) | 39 | 40 |
| தேறிய இலாப விகிதாசாரம் (சதவீதம்) | 14 | 17 |
| **<u>திரவத் தன்மை விகிதாசாரம்</u>** | | |
| நடைமுறை விகிதாசாரம் (தடவைகள்) | 1:1.18 | 1:1.32 |
| திடீர் விகிதாசாரம் (தடவைகள்) | 1:1.16 | 1:1.3 |
| **<u>செயற்பாட்டு விகிதாசாரம்</u>** | | |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனை கிரயம் (சதவீதம்) | 60 | 60 |
| மொத்த வருமானத்திற்கு மொத்த வினியோக மற்றும் நிருவாகச் செலவு (சதவீதம்) | 29 | 27 |

சபையின் நடைமுறை ஆண்டின் மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாப விகிதாரங்கள் முறையே 39 சதவீதம் மற்றும் 14 சதவீதமாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அந்த விகிதாசாரம் முறையே 40 சதவீதம் மற்றும் 17 சதவீதமாக காணப்பட்டது. அதன்படி, நடைமுறை ஆண்டின் போது மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாப விகிதாசாரங்கள் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப முறையே 01 சதவீதம் மற்றும் 03 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதன்படி, சபையின் செயற்பாட்டு அலுவல்களின் செயலாற்றல் குறைவடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி லொத்தர் சபையினால் மாவட்ட வினியோக விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 2011 ஜுன் 26 திகதிய இலக்கம் டீஎல்பீ/எப்ஜஎன்/சீஜஆர்/2011/11 இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் சபையிலிருந்து பெற்றுக்கொண்டு விற்பனை செய்ய முடியாமல் மீதியாக காணப்பட்ட லொத்தர் பத்திரங்கள் சீட்டிலுப்பின் பின்னர் 14 நாட்களுக்குள் தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வினியோக விற்பனை முகவர்களினால் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்ய முடியாமல் மீதியாக காணப்பட்ட 77,406 லொத்தர் பத்திரங்கள் சீட்டிலுப்பின் பின்னர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மாவட்ட வினியோக விற்பனை முகவர்களுக்கு சுற்றறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. மீதியான லொத்தர் பத்திரங்களை 14 நாட்களுக்குள் சபைக்கு ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களில் வினியோக விற்பனை முகவர்களினால் அந்த லொத்தர் பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டன என கணித்து அதன் விற்பனைப் பெறுமதி மற்றும் அந்த சீட்டிலுப்பிற்குரிய அவரின் கமிஷன் தொகை தண்டப்பணமொன்றாக சபை அறவிடப்படும். தற்போது இந்தச் சிக்கல் பெரும்பாலும் தீர்க்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் உள்ளக முகாமைத்துவக் கடிதத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | வினியோக விற்பனை முகவர்களுக்கு வழங்கப்படும் லொத்தர் பத்திரங்களில் திருப்பி அனுப்புவதற்காக சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ள சதவீதம் 2023 பெப்ரவரி முதல் 05 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை அதிகரிப்பதற்காக முகாமைத்துவத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வாலம்புரி, லகி பிரீடம் மற்றும் சுபிரி தன சம்பத ஆகிய மூன்று வகையான லொத்தர்களில் | 2023 நவம்பர் மாதம் 09 திகதி சுபிரி தன சம்பத லொத்தர் டிக்கட் பத்திரங்கள் ஆரம்பிக்கப்பட்ட கால வரையறையுள் சபை எதிர்பார்த்த விற்பனவை விட கூடிய மட்டத்தில் டிக்கட் பத்திரங்களின் நாளாந்த விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன்படி, சுபிரி தன சம்பத லொத்தர் டிக்கட் பத்திரங்களுக்காக ஆரம்ப கட்டத்தில் போதியளவு டிக்கட் பத்திர இருப்பொன்று சந்தைக்கு | விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்ட லொத்தர் பத்திரங்களில் திருப்பியனுப்புவதற்காக இடமளித்துள்ள சதவீதத்தினுள் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருப்பியனுப்பிய லொத்தர் பத்திரங்களின் எண்ணிக்கை 5,163,662 தொகையாக காணப்பட்டதுடன், அது விற்பனைக்காக வழங்கப்பட்ட லொத்தர் பத்திரங்களின் முறையே 28, 17 மற்றும் 21 சதவீதங்களாக காணப்பட்டன. அந்த விற்பனை செய்யப்படாமல் திருப்பியனுப்பப்பட்ட லொத்தர் பத்திரங்களின் எண்ணிக்கையின் கூட்டு அச்சுக் கிரயம் ரூபா 14,701,781 தொகையாக இருந்தது. | அனுப்பப்பட்டிருந்ததுடன், சபை எதிர்பார்த்த மட்டத்தில் நாளாந்த விற்பனையும் நடைபெற்றிருந்தது. போட்டி நிறுவனத்தினால் இந்த டிக்கட் பத்திரங்கள் சந்தையில் நிலைக்கும் என அவதானிக்கப்பட்டு உறுதிப்படுத்திய பின்னர் இதற்கு சமமான டிக்கட் பத்திரமொன்று அவர்களினால் சந்தைக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக டிக்கட் பத்திரங்களின் நாளாந்த விற்பனையில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக திருப்பியனுப்பும் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்ததுடன், தற்போது கேள்விக்கு ஏற்ற வழங்கல் ஒன்று மாத்திரம் மேற்கொள்ளப்படுவதனால் பாரிய திருப்பியனுப்பல் எண்ணிக்கை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 17(5) இன் படி அபிவிருத்தி லொத்தர் ஒன்றின் பரிசு பெறுவோரை தீர்மானிக்கப்பட்ட நாள் முதல் கணக்கிடப்படும் 06 மாத காலப் பகுதியை மிகைத்த பின்னர் அந்த லொத்தரின் அந்த பரிசுக்கு உரிமை கோரும் நபரை கண்டிறிய முடியாமையின் காரணத்தினால் அந்த லொத்தரின் பரிசு வழங்கப்படாத விடத்து ஏதேனும் பரிசொன்று, அரச உடமையாக்க வேண்டியதுடன், அதன் பின்னர் அது ஜனாதிபதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் உதவி பொது முகாயைாளருக்குரிய 06 மாத கால வரையறையை மிகைத்திருந்த 05 வகையான 27 லொத்தர் பத்திரங்களுக்கு உரிய | இவ்வாறான முறையில் எதிர் காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தேவையான தலைவர் / பணிப்பாளர் சபையின் விஷேட அங்கீகாரம் இன்றி மேற்கொள்ள முடியாதவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. | சீட்டிலுக்கப்பட்ட நாள் முதல் 06 மாதங்களை மிகைத்துள்ள லொத்தர் பத்திரங்களுக்காக பரிசுத் தொகை செலுத்தாமல் இருக்கக்கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த வேண்டும் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

கூட்டுத்தொகை ரூபா 11,000 தொகைக்கான பரிசுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சபையின் லொத்தர் முகாமைத்துவ முறைமையின் சீட்டிலுப்பு நாள் முதல் 06 மாத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்துள்ள லொத்தர்கள் ஸ்கேனிங் மேற்கொள்ளும் போது செல்லுபடியாகாத லொத்தர் ஒன்றென இரத்தச் செய்யப்பட்ட போதிலும் இந்த 27 லொத்தர் பத்திரங்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு இயலுமான வகையில் கணினி முறைமையையும் மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அபிவிருத்தி லொத்தர் சபையினுள் லொத்தர் செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செய்முறை வெளி சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று தயாரித்தல் மற்றும் நிறுவுதல், பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்காக தகைமையுடைய வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்காக தேவையான விலைகூறல் ஆவணங்கள் தயாரிக்கும் அலுவல்கள் 2020 ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை மாதாந்த சேவைக் கட்டணம் 68 சதவீத அதிகரிப்புடன் சேவை உடன்படிக்கையின் காலம் நீடிக்கப்பட்டு போட்டி ரீதியான டென்டர் நடைமுறையொன்றுக்கு புறம்பாக மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டு லொத்தர் செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் | சபைக்கு லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று நிறுவுவதற்காக 2019 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பெறுகைக்குரிய விடயப் பரப்பினை திருத்தி மீண்டும் விலைகூறல் அழைப்பதற்கு 2020 ஆண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதன்படி, இந்த நிறுவனத்திற்கு முழுமையாக சபைக்கு உரிமை கிடைக்கக்கூடியவாறு (With Source Cord) லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று தயாரித்தல் மற்றும் அதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்கும் நிறுவனத்தினால் மென்பொருள் முறைமை நிறுவப்பட்ட பின்னர் நாளாந்தம் அதன் செயலாற்றுகை செய்முறையை நிறைவேற்றுதல் சபையின் பதவியணியினருடன் இணைந்து மேற்கொள்ளல் இந்த விடயப் பரப்பிற்கு உட்படுத்தப்பட்டது. அதன்படி, அந்த மென்பொருள் முறைமை தொடர்பாக சபையின் பதவியணியினர், சேவை நிறுவனத்தின் உத்தியோகத்தினருடன் | லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று தயாரித்து நிறுவி பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்காக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யும் செய்முறை 03 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், பூர்த்தி செய்யப்படாமையால் அதனை விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவை பெற்றுக்கொண்டிருந்தமையால் 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு இறுதி வரை ரூபா 73,221,351 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இணைந்து செயற்படும் போது சபையின் பதவியணியினருக்கு புரிந்துணர்வொன்று கிடைப்பதனால் அவ்வாறு விடயப்பரப்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும், லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமை நிறுவுதல் மற்றும் செயலாற்றுகை அலுவல்களுக்காக பயன்படுத்துதல் அதற்குப் பொருத்தமான தகைமையுடைய தகவல்கள் தொழில்நுட்ப நிபுணர்களினால் அடங்குதலாக மேற்கொள்ள வேண்டிய கருமம் ஒன்றாக இருப்பதனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அதற்குரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | |
| (உ) | அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியிடையே 2009 ஆகஸ்ட் 18 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியினால் வழங்கும் சேவைகள் தொடர்பாக முறைமைக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது, LMS மூலம் பெற்றுக்கொண்டு செயற்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்ப முறைமைக்கு பதிலாக புதிய தகவல் தொழில்நுட்ப முறைமையொன்று பெற்றுக்கொள்வதற்கு பெறுகை செயன்முறையின் மூலம் தெரிவு செய்யும் ஆரம்ப அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைக் கணக்காய்விற்காக மேற்கொள்ள நேரிடுகின்ற பாரிய கிரயம் தொடர்பாக கவனம் செலுத்தி எதிர் காலத்தில் இதற்காக தீர்மானம் எடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட செயற்பாட்டு கையேட்டின் படி அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு நடடிவடிக்கைமுறை ஒன்றின்றி அபிவிருத்தி லொத்தர் சபையினால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 105,739,646 இற்கான தொகையொன்று ஊக்குவிப்பு தொகையொன்றென பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சபையினால் ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்யும் செய்முறையை அடங்கிய புதிய செய்முறையொன்று தயாரிக்கப்பட்டு 2024 மே 20 திகதி நடைபெற்ற 294 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தில் பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், எதிர் காலத்தில் அதற்காக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படும். | ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்காக முறையான செயற்படு முறைமை தயாரிக்கப்பட்டு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | ஒவ்வொரு பதவியணி அங்கத்தவர்களின் கடமையின் தன்மை, அனுபவம் மற்றும் செயலாற்றுகை போன்ற காரணிகள் தொடர்பாக மதிப்பாய்வு செய்வதற்கு தேவையான நெறிமுறை உட்படுத்தப்பட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தும் செய்முறையொன்று தயாரித்தல் பொருத்தமாக இருந்த போதிலும், ஒரு மாதத்தில் 18 அரச கடமை நாட்கள் கடமை மேற்கொள்ள வேண்டுமென்ற நெறிமுறையின் மீது மாத்திரம் என்ற அடிப்படையில் பதவியணியினருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | 2024 மே 20 திகதி நடாத்தப்பட்ட 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செய்யும் செய்முறை தொடர்பாக தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபைப் பத்திரம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, எதிர் காலத்தில் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படும். | பதவியணி அங்கத்தவர்களின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்கு தேவையான நெறிமுறை அடங்கிய ஊக்குவிப்பு கொடுப்பனவு முறையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஏ) | வாலம்புரி விஷேட லொத்தரின் சீட்டிழுப்பு தவணை இலக்கம் 02 முதல் சீட்டிழுப்பு தவணை இலக்கம் 05 வரை 04 சீட்டிழுப்பு தவணை வாரங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்ததுடன், அந்த சீட்டிழுப்பு தவணைகள் தொடர்பாக வினியோக விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த | இந்தக காலப் பகுதியில் அரச புதிய வரிக் கொள்கைக்கு எதிராக அரச மற்றும் தனியார் துறையினர் ஊழியர் ஆர்ப்பாட்டம் மற்றும் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருந்தமையால் லொத்தர் பத்திரங்களின் விற்பனையில் பின்னடைவொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், ஜுலை | வாலம்புரி விஷேட லொத்தர் விற்பனை அதிகரிப்பதற்காக உபாயங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லொத்தர் பத்திரங்களில் திருப்பியனுப்பியிருந்த சதவீதம் வழங்கியிருந்த மொத்த லொத்தர் பத்திரங்களின் எண்ணிக்கையில் முறையே 27,21,23 மற்றும் 45 சதவீதமாக காணப்பட்டதுடன், அது அபிவிருத்தி லொத்தர் சபையின் திருப்பியனுப்புவதற்காக இடமளிக்கப்பட்டிருந்த 10 சதவீதத்தை விட மிகவும் கூடிய பெறுமதியொன்று காணப்பட்டதுடன், இந்த திருப்பியனுப்பப்பட்ட லொத்தர் பத்திரங்களுக்கான அச்சுக் கிரயம் ரூபா 2,874,111 தொகையாக இருந்தது. | மாத ஆரம்பத்தில் நாடு பூராகவும் நிலவிய மழை நிலைமையும் லொத்தர் விற்பனை வீழ்ச்சிக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. வாலம்புரி லொத்தரின் 2 சீட்டிலுப்பிலிருந்து 05 சீட்டிலுப்பு வரை விற்பனை படிப்படியாக குறைவடைவதற்கு மேற்கூறப்பட்ட விடயங்களும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இதன் காரணமாக திருப்பியனுப்பும் எண்ணிக்கையின் சதவீதம் அதிகரித்திருந்தது. | |
| (ஐ) | 2020 ஆண்டின் போது காணாமல் போயிருந்ததென கணிக்கப்பட்டிருந்த 2945 ஷெனிக லொத்தர் பத்திர டிக்கட் புத்தகங்கள் தொடர்பாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,673,875 இற்கான தொகையினை அறவீடு செய்யப்படாமை தொடர்பாக மீளாய்வாண்டின் போது ஆரம்ப விசாரணையொன்று நடாத்தியிருந்ததுடன், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் தொகுதி II, அத்தியாயம் XLVIII பிரிவு 13.2 இன் படி ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் முடிவாக்கப்பட வேண்டியிருந்ததுடன், மேலதிக காலம் தேவைப்படின், போதியளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு கால நீடிப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஆரம்ப விசாரணையை பூர்த்தி செய்வதற்காக 30 மாதங்களை விட மிகையான காலம் எடுத்திருந்ததுடன், கால தாமதத்திற்காக விசாரணை உத்தியோகத்தரினால் போதியளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பித்து | இந்த ஆரம்ப விசாரணை மேற்கொள்ளுமாறு 2021 ஜனவரி 06 திகதி எழுத்துமூல அறிவித்தல் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு மேற்கொண்ட பின்னர் ஒட்டுமொத்த உலகத்திற்கும் போலவே இலங்கையையும் தாக்கிய கொரோனா பாதிப்பு காணப்பட்டமையால் விசாரணை அலுவல்கள் முறைப் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டது 2022 ஆண்டின் இறுதிப் பகுதியிலே ஆகும். அதன் காரணமாக 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை. அதன் பின்னர் இந்த விசாரணைக்குரிய தகவல்கள் பெற்றுக்கொள்வதில் செயல்முறைசார் சிக்கல்கள் காணப்பட்டமையால் தாமதமொன்று ஏற்பட்டிருந்தது.<br><br>காணாமல் போயிருந்த 2945 ஷெனிக லொத்தர் டிக்கட் புத்தகங்களில் 2471 புத்தகங்கள் ஏதேதும் தரப்பினரினால விண்ணப்பிப்பதற்கு கோறியதாகவோ ஏதேனும் தரப்பினருக்கு வழங்கப்பட்டதாகவோ அல்லது ஒப்புக்கொள்ளப்பட்டதாகவோ குறிப்பிடப்பட்ட ஏதேனும் | பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். |

காலநீடிப்பு பெற்றுக் கொள்ளலும் மேற்கொண்டிருக்கவில்லை.
அதேபோல், நிச்சயிக்கப்பட்ட செய்முறையொன்றின்றி அந்த விசாரணை உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2014 மே 30 திகதிய 14/2014 இலக்கம் கொண்ட ஆரம்ப விசாரணைக்கான கொடுப்பனவு மேற்கொள்வதற்குரிய பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஜூலை 31 திகதி 18/2018 இலக்கம் கொண்ட ஒழுக்காற்று விசாரணைக்காக கொடுப்பனவுக்குரிய பொது நிருவாக சுற்றறிக்கையின் உச்ச மட்ட ரேட்கள் பிழையாக பயன்படுத்தி கூட்டுத்தொகை 683,971 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்தது.

காணாமல் போனதென கணிக்கப்பட்டிருந்த 2945 டிக்கட் புத்தகங்களில் 2471 டிக்கட் புத்தகங்கள் ஏதேனும் தரப்பினர் ஒருவர் விண்ணப்பித்திருந்தமை அல்லது ஏதேனும் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததென்பதற்கு அல்லது ஒப்படைக்கப்பட்டிருந்ததென்பதற்கு, எழுத்துமூல சான்றுகள் அபிவிருத்தி லொத்தர் சபையிடம் காணப்படாமையால் ஷெனிக லொத்தர் டிக்கட் புத்தகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகையில் 83 சதவீதமாகிய ரூபா 2,191,785 இற்கான தொகையினை அறவீடு செய்து கொள்வதற்கு முடியாமல் இருந்தது.

ஆவணங்கள் கண்டறிய முடியாதிருந்தது. அதேபோல் தற்போது அறவிடப்பட வேண்டும் என இனங்கண்டிருந்த தரப்பினரிடம் இந்தத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் காணாமல் போயிருந்த லொத்தர் டிக்கட் புத்தகங்களின் கனிஷமான தொகையொன்று அறவீடு செய்வதற்கு இயலுமை கிடைக்கின்றது.

(ஓ) மீளாய்வாண்டு திசெம்பர் 01 திகதி முதல் திசெம்பர் 10 திகதி வரை சீட்டிழுக்கப்பட்ட கப்ருக லொத்தர் பத்திரங்கள் அச்சிடும் போது அங்கு சுபிரி ஜயமல்ல ஆகிய ரூபா 470 மில்லியன் தொகை லொத்தர் பத்திரத்தின் அச்சுப் பிழையுடனான லொத்தர் டிக்கட் புத்தகங்கள் சந்தைக்கு வழங்க முன்னர் அவற்றை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினால்

இதற்காக 2023 திசெம்பர் 06 திகதி பல செய்தித்தாள் அறிவித்தல்கள் மூலம் நுகர்வுப் பொதுமக்களுக்கு அறிவித்தல் ஊடாக சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டது. எதிர் காலத்தில் இவ்வாறான

| | | | |
|---|---|---|---|
| | முகப் பக்கத்தில் வலது பக்க மேல் மூலையில் சித்திர பதிவில் ‘‘ஸிஷின ஜயமல்ல ரூபா 47000 இலட்சம்’’ என பிழையாக அச்சிடப்பட்டிருந்ததுடன், வரைவு கலைப் படிவம் (Art Work) மற்றும் அச்சிடப்பட்ட லொத்தர் பத்திரங்கள் தெரிவு பரிசோதனைக்காக சபையினால் நிருவப்பட்டிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டுச் செய்முறையில் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் அச்சீட்டுப் பிழையை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் தரப் பரிசோதனை சபை உத்தியோகத்தர்களினால் இந்த வழுக்களை இனங்காண்பதற்கு முடியாமல் இருத்தல் ஆகிய விடயங்களினால் அச்சுப் பிழையுடனான 4,392,010 தொகையான லொத்தர் பத்திரங்கள் சந்தைக்கு வினியோகிக்கப்பட்டிருந்தது.<br>மேலும், இந்த அச்சுப் பிழை மற்றும் அதனை சரி செய்ய வேண்டிய முறை தொடர்பாக நுகர்வோரை அறிவுருத்துவதற்காக செய்தித்தாள் பிரசுரித்தலுக்காக ரூபா 22,873 தொகையொன்று சபைக்கு செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது. | தவறுகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய முறையில் கடமை மேற்கொள்ளப்படாமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | சுபிரி தன சம்பத லொத்தர் சீட்டிழுப்பு அலுவல்களை கணினி மென்பொருளொன்றை பயன்படுத்தி தேசிய தொலைக்காட்சி வளாக ஒலிபரப்பு அறைக்கு வெளியே காணப்படும் அறையொன்றில் மேற்கொள்ளப்படுவதுடன், தொலைகாட்சி மூலம் ஒலிபரப்பு செய்யும் போது சீட்டிழுக்கப்பட்ட உண்மையான நிலைமையை காணாதவாறு வீடியோ நேர் ஒளிபரப்பு மென்பொருளொன்று (Game Animation Software) பயன்படுத்தி சீட்டிழுப்பு | சுபிரி தன சம்பத சீட்டிழுப்பு செய்முறைக்காக புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்கு சுமார் 06 மாத காலம் செலவிட நேரிடுவதனால் 2023 ஆண்டின் போது எதிர்பார்த்த வருமானத்தை உருவாக்கிக் கொள்ளும் குறிக்கோளுடன் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக அதிஷ்ட இலக்கம் தெரிவு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அங்கு தயாரிக்கப்பட்ட03 மென்பொருட்கள் ஊடாக | நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக்கூடியவாறு சீட்டிழுக்கப்பட்ட உண்மையான முறை தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரமொன்றின் மூலம் பந்துகளை குழுக்கல் செய்து அவற்றில் எதேர்ச்சையாக பந்தொன்று தெரிவு செய்தல் மேற்கொள்ளும் விதத்தில் வீடியோவொன்று தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றது. இந்த வீடியோ நேர் ஒலிபரப்பு மென்பொருள் தயாரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சபையினால் ரூபா 3,350,000 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், 2024 ஆண்டு முதல் சேவைகள் வழங்குவதற்காக நாளாந்தம் ரூபா 5,000 வீதம் வருடாந்தம் ரூபா 1,860,000 தொகை செலுத்துவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த லெத்தர் சீட்டிழுப்பு செய்முறை 2024 மே 02 திகதி முதல் சீட்டிழுப்பு இயந்திரம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | மொத்த சீட்டிழுப்பு செய்முறை மேற்கொள்ளப்படுவதுடன், அங்கு அதிஷ்ட இலக்கம் உருவாக்கலுக்கான மென்பொருள் முழுமையான கணக்காய்வொன்றுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு சீட்டிழுப்பு இயந்திரத்தின் உண்மையான தன்மைக்கு சமமான வீடியோ அனிமேஷன் ஒன்றின் மூலம் சுகர்வோருக்கு சீட்டிழுப்பு இயந்திரம் ஒன்று தன்மைக்கு சமமான தோற்றம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நுகர்வோரின் கவர்ச்சியை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது புதிய இயந்திரம் கொள்வனவு செய்த பின்னரும் லொத்தர் சீட்டிழுப்பு செய்முறை மாறாத வகையில் ஒரே தன்மையுடன் பேணிச் செல்வதற்கு இயலுமாக இருப்பதனால் ஆகும். அவ்வாறன்றி லொத்தர் டிக்கட் பத்திரங்கள் அறிமுகப்படுத்திய ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஒரு முறையிலும், சீட்டிழுப்பு இயந்திரம் கொள்வனவு செய்த பின்னர் வேறொரு முறையிலும் லொத்தர் சீட்டிழுப்பு செய்முறை மேற்கொள்ளப்படின் அதன் மூலம் நுகர்வோரின் நம்பிக்கைக்கு தாக்கம் ஒன்று ஏற்படும் என அவதானிக்கப்பட்டமையினாலே ஆகும். | |
| (ஔ) | அபிவிருத்தி லொத்தர் சபையினால் 2020 ஆண்டில் சந்தைக்கு அறிமுகப்படுத்திய ஸஸிரி லொத்தரின் சீட்டிழுப்பு அலுவல்கள் தேசிய தொலைக்காட்சி வளாக ஒலிபரப்பு அறைக்கு வெளியே உள்ள அறையொன்றில் மேற்கொள்ளப்படுவதுடன், தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பின் போது சீட்டிழுக்கப்பட்ட உண்மையான | நாளாந்தம் லொத்தர்களை நடாத்திச் செல்வதற்காக தேவைப்படாதது போலவே தற்போது முறைமையில் பயன்படுத்தப்படாத விடயங்களுக்குரிய மற்றும் முறைமையை விரிவாக்கள் மேற்கெள்ளும் போது தாக்கம் ஏற்படுத்தாத வரையறைகள் தொடர்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழுக்கள் காணப்படுகின்றது. இந்த | இனங் காணப்பட்ட 15 பல்வேறு வழுக்களை விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. மற்றும் நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக்கூடியவாறு சீட்டிழுக்கப்பட்ட உண்மையான முறை தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பப்பட வேண்டும். |

முறை காட்டப்படாமல் வீடியோ நேர் ஒலிபரப்பு மென்பொருளொன்று பயன்படுத்தி வீடியோவொன்று தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றது. மேலும், இந்த சீட்டிழுப்பு செய்முறைக்காக பயன்படுத்தப்படும் மென்பொருள் முறைமை தொடர்பாக 2021 ஆண்டில் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றினால் முறைமைக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இனங் காணப்பட்டிருந்த 04 முறைமை வழுக்கள், 04 முறைமை வரையறை வழுக்கள், 03 கட்டமைப்பு சார் வழுக்கள், 03 பயனர் இடைமுக வழுக்கள் மற்றும் 01 கட்டுப்பாட்டு பற்றாக்குறை வழுக்களாக ஆக மொத்தம் 15 பல்வேறு வழுக்களை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வழுக்களை சரி செய்தல் மற்றும் முறைமையை விரிவாக்கல் இரண்டாம் கட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(க) சுபிரி தன சம்பத லொத்தரின் 49 ஆவது சீட்டிழுப்பு தவணை

(i) சுபிரி தன சம்பத சீட்டுழுப்பு செய்முறையில் காணப்பட்ட தொழில்நுட்ப மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்களினால் மீளாய்வாண்டு திசெம்பர் 27 திகதி சீட்டிழுக்கப்பட்ட சுபிரி தன சம்பதவின் 49 ஆவது சீட்டிழுப்பு தவணையின் சீட்டிழுப்பு மென்பொருள் மூலம் வழங்கியிருந்த 06 அதிஷ்ட இலக்கங்கள் ஆங்கில எழுத்திற்கு பதிலாக பிழையான இலக்கம் ஒன்றுடனான உத்தியோகபூர்வ பெறுபேறு வழங்கப்பட்டு அந்த பிழையான இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதிஷ்டசாளிகளுக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர் சீட்டிழுப்பு செய்முறையில் ஏற்பட்டிருந்த சில தவறுதல்கள் காரணமாக சரியான இலக்கத்திற்கு பதிலாக பிழையான இலக்கம் ஒன்று உத்தியோகபூர்வ பெறுபேறு என வெளியிடப்பட்டிருந்தது. இந்த பெறுபேறின் அடிப்படையில் சீட்டிழுப்பிற்குரிய அதிஷ்டசாளிகள் சீட்டிழுக்கப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் முதல் தமது வெற்றிப் பரிசுத் தொகையினை பெற்றுக்கொள்வதற்காக முன்வருவார்கள். வழமையான முறையின் கீழ் நாளாந்த சீட்டிழுப்பின் போது LMS முறைமைக்கு உட்படுத்தப்படுகின்ற அதிவிஷேட தகவல்கள் அடங்கிய கோவையின் படி

நுகர்வோர் நம்பிக்கையை மீறாத வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை வலுப்படுத்தப்படல் மற்றும் பிழையான இலக்கங்களைக் கொண்ட உத்தியோகபூர்வ பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களிடம் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சிக்கல் அவதானிக்கப்பட்டவுடன் இது தொடர்பாக அனுப்பப்பட்ட 2024 ஜனவரி மாதம் 05 திகதி நடைபெற்ற 289 ஆவது பணிப்பாளர் சபையின் அறிக்கையின் படி அச் சந்தர்ப்பத்திலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் அதிவிஷேட தரவுக் கோவைக்கு மேலும் கொடுப்பனவு மேற்கொள்ளல் காலத்திற்கு பொருத்தமானதென அவதானிக்கப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டது ஏதேனும் காரணத்தினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ பெறுபேறு சரியானதல்ல என வெளியிடப்பட்டால் நுகர்வோர் நம்பிக்கை முறிடைவதுடன், அதன் மூலம் லொத்தர் துறைக்கு பாரிய தாக்கம் ஒன்று ஏற்படுக் கூடும் என்பதனாலே ஆகும்.

இவ்வாறான சம்பவமொன்று முதற் தடவையாக ஏற்பட்டிருந்த காரணத்தினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக செய்முறையொன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. இதனால் தேவையான அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்காக 2024 ஜனவரி மாதம் 05 திகதி உடனடியாக பணிப்பாளர் சபை கூடி தேவையான தீர்மானங்கள் மற்றும் உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், மேலும், இவ்வாறான சிக்கல்கள் எதிர் காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்ந்தும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதற்கு தேவையான மனிதவளப் பயிற்சியும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (ii) சுபிரி தன சம்பத 49 ஆவது சீட்டிழுப்பு தவணையின் போது சீட்டிழுப்பு மென்பொருளின் மூலம் வழங்கியிருந்த 06 சரியான அதிஷ்ட இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்காக 2024 ஜனவரி 05 திகதி நடைபெற்ற 289 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அதனை 2024 ஜனவரி 10 திகதி செய்தித் தாள் அறிவித்தல் ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஏப்ரல் 24 திகதி வரையும் அந்த கொடுப்பனவு மேற்கொள்தற்கு இயலுமானவாறு சபையின் கணினி முறைமையினை நாளதுவரையாக்கி கொடுப்பனவு செய்திருக்கவில்லை. | சரியான இலக்கத்திற்கு மற்றும் வெளியிடப்பட்ட இலக்கம் ஆகிய இரண்டிற்கும் செலுத்த வேண்டி நேரிட்டிருந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாக இருந்தமையால் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ள பொருத்தமானவாறு கணினி முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வித்தியாசங்கள் மேற்கொள்வதற்கு நியாயமான காலமொன்று எடுக்க நேரிடுகின்றது. அதன் காரணமாக சபையினால் வேண்டுமென்றே சரியான இலக்கத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளலை தாமதித்தல் மேற்கொள்ளப்படாததுடன், சபை லொத்தர் நுகர்வோருக்கு நிலவும் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக் கூறல் காரணத்தினால் ஏதேனும் தரப்பினருக்கு அநியாயமொன்று ஏற்படாதவாறு முறைமையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் அதற்காக நியாயமான காலமொன்று எடுக்க நேரிட்டது. தற்போது முறைமை நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றமையால் கொடுப்பனவு மேற்கொள்ளல் போலவே பரிசுத் தொகை பெற்றுக்கொள்வதற்கும் இயலுமாக உள்ளது. | கணினி முறைமையை உரிய நேரத்தில் நாளதுவரை ஆக்கப்படல் மற்றும் நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக்கூடிவாறு செயற்பட வேண்டும். |
| (iii) சுபிரி தன வாசனா லொத்தர் பத்திரத்தின் 49 ஆவது சீட்டிழுப்பு தவணையில் சீட்டிழுப்பு மென்பொருளினால் வழங்கியிருந்த சரியான அதிஷ்ட இலக்கம் 06 உம் முறையே பொருந்தக்கூடிய ரூபா 2,500,000 இற்கான தொகையொன்று வெற்றியளித்துள்ள லொத்தர் பத்திரமொன்று விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் சீட்டிழுப்பு செய்முறையின் போது ஏற்பட்டிருந்த இந்த வழுவினை சரி செய்வதற்கு | சுபிரி தன சம்பத 49 ஆவது சீட்டிழுப்பு தவணையின் ஆரம்ப பெறுபேற்றுப் பதிவேடு வெளியிடப்பட்ட பின்னர் மற்றும் சரியான இலக்கத்துடனான பெறுபேறு வெளியிடுவதற்கு முன்னர் மேற்கூறிய ரூபா 2,000 இற்கான உரிமையை பெற்றுக்கொண்ட டிக்கட் பத்திரம் பரிசுத் தொகை பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட விற்பனவு முகவர் வரை சமர்ப்பிக்கப்பட்டு, அதனை சபையினாலும் மீளளிப்பு செய்வதற்கு | நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு இயலாமல் இருந்தமையால் அந்த லொத்தர் பத்திரத்தை கொள்வனவு செய்திருந்த நுகர்வோருக்கு ரூபா 2,000 தொகையொன்று மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. சரியான இலக்கத்தையுடைய அதிஷ்ட தரவுக் கோவையின் படி அந்த டிக்கட் பத்திரத்திற்கு ரூபா 2,500,000 பரிசுத் தொகையொன்று உரித்தாகியிருந்த போதிலும், அது மாவட்ட விற்பனை முகவர் வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த டிக்கட் பத்திரமொன்றாக காணப்பட்டமையால் அதன் உண்மையான அதிஷ்டசாலியை கண்டறிய முடியாமையால் சபை லொத்தர் நுகர்வோருடன் காணப்படும் பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் அடிப்படையில் அது ரூபா 2,000 கொடுப்பனவு என கணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறலின் கீழ் குறிப்பிட்ட அதிஷ்டசாலி உட்பட அனைத்து தரப்பினருக்கும் நியாயமொன்று செய்தல் குறிக்கோளுடன் கொண்டு 2024 ஆண்டு ஜனவரி 10 திகதி மும்மொழிகளிலும் செய்தித்தாள் அறிவித்தல் ஒட்டுமொத்த பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | |
| (ங) | விற்பனை விலை ரூபா 20 ஆக காணப்பட்ட 2023 ஜனவரி முதல் ஜூலை 05 வரையான காலப் பகுதியில் 07 வகையான லொத்தர் பத்திரங்களில் E லொத்தர் விற்பனை லொத்தர் பத்திரங்கள் 453,948 ஆக காணப்பட்டதுடன், விற்பனை விலை ரூபா 40 வரை அதிகரித்த பின்னர் 2023 ஜூலை 06 திகதி முதல் திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் E லொத்தர் விற்பனவை 2953 லொத்தர் பத்திரங்கள் வரை 99.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. | விலை ரூபா 40 ஆக ஆகியதுடன், பொதுவான லொத்தர் சீட்டிழுப்பிற்கு மேலதிகமாக லக்ன வரம மற்றும் Second Chance சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப தற்போது காணப்படும் கணினி முறைமையில் மாற்றங்களும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த மாற்றங்களுக்காக குறிப்பிட்ட காலம் எடுக்கும் என குறிப்பிட்ட கணினி நிறுவனத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2023 ஜூலை 06 திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்த | E லொத்தர் பத்திர விற்பனை மேம்பாட்டிற்காக முறையான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | Sweep App முறைமை 2023 திசெம்பர் 25 திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.<br><br>கணினி முறைமை அபிவிருத்தி அலுவல்களுக்காக 2023 ஜூலை 06 முதல் 2023 திசெம்பர் 25 வரை Sweep App முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட்ட விற்பனவு செயற்பாட்டு அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தமையால் விற்பனை குறைவடைந்திருந்ததென அறிவிக்கின்றேன். | |
| (ச) | லொத்தர்களின் விலையை ரூபா 40 வரை அதிகரித்த பின்னர் சனிதா வாசனா, லக்ன வாசனா, கப்ருக, சுபர்போல், அத கோடிபதி, ஸஸிரி மற்றும் ஜயோதா ஆகிய 07 வகையான லொத்தர் பத்திரங்களில் E லொத்தர் விற்பனையின் விற்பனவு நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் மாதம் 06 லொத்தர்களின் E லொத்தர் விற்பனை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கப்ருக E லொத்தர் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது. | Sweep App விற்பனை அலுவல்கள் செயற்படாது காணப்பட்டது கணினி முறைமையின் அபிவிருத்தி விடயங்களினாலே என அறிவிக்கின்றேன். | கணினி முறைமையின் அபிவிருத்தி அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து E லொத்தர் பத்திர விற்பனையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது அபிவிருத்தி லொத்தர் சபைக்காக தொழில் முயற்சிகள் வள திட்டமிடல் (ERP) செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 2019 ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் முதற் கட்டமாக கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று நிறுவும் கருமம் 2020 ஆண்டு முதல் எல்லா வருடங்களிலும் பெறுகை திட்டத்தில் | இந்த பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு நிறுவனத்திற்கு ERP முறைமையொன்று நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, சபையின் ஒட்டுமொத்த செயற்பாட்டு செய்முறைக்குரிய தேவைப்பாட்டினை தீர்மானித்து ஒவ்வொரு பிரிவு மட்டத்தில் நிறைவேற்றப்படும் செய்முறையை ஆய்வு செய்து | பெறுகை திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுகை அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதன் அந்த விடயப் பரப்பிற்கு உள்ளடங்கிய அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த செயற்திட்டத்தின் முதற் கட்டமென கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அந்த விடயம் 2023 ஆண்டில் ஆதர் சீ கிலாக் மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நிறுவனம் பின்னர் அவ்விடயத்தை நிறைவேற்றுவதற்கு மறுத்திருந்தமையால் பின்னர் இதற்காக மீண்டும் போட்டி சார் விலை கூறல், கூறுவிலைகள் அழைக்கப்பட்டு தகைமையுடைய வழங்குனர் ஒருவர் தெரிவு செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்போது உலகத்தில் நடைமுறையிலுள்ள தொழில்நுட்ப ஆழம் மற்றும் லொத்தர் சந்தையில் காணப்படும் போட்டித் தன்மையை கவனத்தில் எடுத்து லொத்தர் விற்பனவை டிஜிடல் ஊடகத்தை பயன்படுத்தி மேற்கொள்வதற்காக டிஜிடல் உள்ளீடொன்று DLB Sweep என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு SMS ஊடாக E லொத்தர் விற்பனை செய்தல் விற்பனை மேற்பாடு உட்பட கருமங்களுக்காக 2023 ஆண்டின் பாதீட்டின் மூலம் ரூபா 57,625,000 இற்கான தொகையொன்று ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் | இலங்கை மத்திய வங்கியின் அறிவுரையின் மீது இந்த உள்ளீடு தயாரிக்கப்பட்டமையால் இந்த உள்ளீட்டுக்கு உட்படுவதில் சில நடைமுறை வசதியீனங்களுக்கு நுகர்வோருக்கு முகங்கொடுக்க நேரிட்டிருந்த காரணத்தினால் இந்த உள்ளீட்டினூடாக விற்பனை மேற்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டது. அதன்படி, இந்த உள்ளீட்டை மேம்படுத்துவதற்காக அந்த தடைகளை சரி செய்து பின்னர் மேம்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளும் படி 2022 செப்தம்பர் 28 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அறிவுரை | E லொத்தர் பத்திரங்களின் மேம்பாட்டு அலுவல்களை செயற்படுத்தி லொத்தர் பத்திர விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023 ஆண்டில் E லொத்தர் விற்பனை மேம்பாட்டுக் கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா 1,643,873 இற்கான தொகையொன்று மாத்திரம் காணப்பட்டதுடன், அது மதிப்பீட்டுத் தொகையில் 3 சதவீதமாகிய மிகவும் குறைந்த சதவீதத்தில் காணப்பட்டது. | வழங்கப்பட்டது. அதன் காரணமாக மேம்பாட்டு அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகையினை முழுமையாக பயன்படுத்த முடியாமல் இருந்தது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திருத்திய பாதீட்டின் படி ரூபா 27,086,530,651 இற்கான இலக்காகிய லொத்தர் விற்பனவு வருமானத்தை உழைத்துக்கொள்வதற்கு எதிர்வு கூறப்பட்டிருந்த போதிலும் உழைத்திருந்த உண்மை வருமானம் ரூபா 26,608,397,380 தொகையாக காணப்பட்டமையால் பாதீட்டு வருமானத்தை விட ரூபா 478,133,271 தொகை குறைவாக வருமானம் உழைக்கப்பட்டிருந்தது, | • திருத்திய பாதீட்டின் மூலம் சுபிரி தன சம்பத லொத்தர் பத்திரம் 2023 ஒக்தோபர் மாதம் சந்தைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அங்கு காணப்பட்ட தொழில்நுட்ப முறைமையை தயாரிப்பதில் குறிப்பிட்ட காலம் எடுத்தமையால் அந்த லொத்தர் பத்திரங்களை 2023 நவம்பர் மாதமே சந்தைக்கு வழங்கியிருந்தது. அந்த லொத்தரின் மூலம் கிடைக்க வேண்டிய வருமானம் குறைந்திருந்தது.<br><br>• திருத்திய பாதீட்டின் மூலம் 02 வாலம்புரி சீட்டிழுப்புகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் விலை ரூபா 40 ஆக்கப்பட்டமையால் வாலம்புரி லொத்தர்களுக்கான கேள்வி குறைவடைந்த காரணத்தினால் இந்த 02 சீட்டிழுப்புக்களும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் அந்த விற்பனை வருமானத்தை சபை இழந்திருந்தது.<br><br>விலை ரூபா 40 ஆகியதுடன் ஷெனிக லொத்தர்களின் எதிர்பார்த்த வருமானத்தை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. | இலக்காகிய விற்பனை வருமானத்தை உழைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது 17 செலவு விடயங்களில் திருத்திய பாதீட்டு ஏற்பாட்டு வரையறையை மிகைத்து கூட்டுப் பெறுமதி ரூபா 28,812,660 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஒவ்வொரு விடயங்களையும் கவனத்தில் எடுத்த போது பாதீட்டு ஏற்பாட்டு வரையறையை மிகைத்து செலவீடு செய்தல் 2 சதவீதத்திற்கும் 1503 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | இந்த 17 செலவுத் தலைப்புகள் நிருவாகச் செலவுத் தொகுதிக்கு உரிய செலவுத் தலைப்புகளாக காணப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது நிளவிய சீரற்ற பொருளாதார நிலைமையினுள் மூலப் பொருட்களின் விலை மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்பட்டிருந்த தொடர்ச்சியான மாற்றங்கள் மீது பாதீட்டு ஏற்பாடுகளை அறுதியாக எதிர்வு கூறுவதில் சிக்கலொன்று காணப்பட்டது. | செலவுகள் மேற்கொள்ளும் போது பாதீட்டு ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |